

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 20.03.2020


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்










## தமிழக நிகழ்வுகள்

- தமிழ் வழியில் படித்த மாணவர்களுக்கான சட்டதிருத்த மசோதாவின் படி, தொடக்கப்பள்ளி முதல் தமிழ் வழியில் படித்த விண்ணப்ப தாரர்களுக்கு மட்டுமே **'தமிழ் வழியில் படித்த மாணவர்கள்'** (Persons Studied in Tamil Medium – PSTM) என்ற ஒதுக்கீட்டின் கீழ் நேரடி ஆட்சேர்ப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட இருக்கின்றது.
    - **2010ஆம்** ஆண்டில், **தமிழக அரசானது PSTM விண்ணப்பதாரர்களுக்கு 20% இட ஒதுக்கீட்டை அறிவித்தது.**
    - **செய்தி துளிகள்:**
        - இந்த மசோதாவானது PSTM மாநிலச் சட்டம், 2010ன் கீழ், பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் தமிழ்நாட்டில் நியமனம் என்பதைத் திருத்தம் செய்ய முயலுகின்றது.

## தேசிய நிகழ்வுகள்

- **நிர்பயா வழக்கு** தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட **சீராய்வு மனுக்களை இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்துள்ளது**.
    - இறுதித் தண்டனைத் தீர்ப்பிற்கு எதிரான மனு, தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் ஒரு சீராய்வு மனுவானது தாக்கல்

செய்யப்படுகின்றது.

- சீராய்வு மனுக்கள் **இந்திய அரசியலமைப்பின் 142வது பிரிவின் கீழ் தாக்கல்** செய்யப்படுகின்றன.
- **செய்தி துளிகள் :**
  - மறு ஆய்வு மனு இந்திய உச்ச நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் இந்த சீராய்வு மனுவானது தாக்கல் செய்யப்படும்.
  - சீராய்வு மனுவின் கருத்தாக்கமானது இந்திய அரசியலமைப்பின் 137வது சரத்தினால் ஆதரிக்கப்படுகின்றது.
  - இந்த சரத்தானது 145வது சரத்தின் கீழ் உச்ச நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை உச்சநீதிமன்றமே மறு ஆய்வு செய்ய அனுமதிக்கின்றது.

## சர்வதேச நிகழ்வுகள்

- மத்திய சமஸ்கிருத பல்கலைக் கழக மசோதா, 2019 என்ற ஒரு மசோதாவை நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
  - இது இந்தியாவின் மூன்று பல்கலைக் கழகங்களுக்கு மத்தியப் பல்கலைக்கழக அங்கீகாரத்தை வழங்க இருக்கின்றது.
  - **2020ஆம் ஆண்டு** மார்ச் 16 அன்று **மாநிலங்களவையானது மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழக மசோதா,2019ஐ** குரல் **வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றியது.**

- **செய்தி துளிகள்:**
    - மூன்று பல்கலைக் கழகங்கள் பின்வருமாறு:
    - ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீத், திருப்பதி
    - ராஷ்டிரிய சமஸ்கிருத சன்ஸ்தான், புது தில்லி மற்றும்
    - ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி ராஷ்டிரிய சமஸ்கிருத வித்யாபீத், புது தில்லி

- 2020ஆம் ஆண்டு **மார்ச் 17** அன்று வங்கதேசமானது **"ஜதீர் பிதா"** பங்கபந்து ஷேக் **முஜிபுர் ரஹ்மானின் 100வது பிறந்த தினத்தைக் கொண்டாடியது.**
    - பிரதமர் மோடி காணொளியின் மூலம் இந்தக் கொண்டாட்டத்தில் பங்கேற்றார்.
    - ஷேக் முஜிபுர் ரஹ்மான் வங்கதேசத்தைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி ஆவார்.
    - **செய்தி துளிகள் :**
        - இவர் **வங்கதேசத்தின் தந்தை என்றும் அழைக்கப்படுகின்றார்.**
        - இவர் வங்கதேசத்தின் முதல் அதிபராகப் பணியாற்றினார்.
        - பின்னர் 1971 மற்றும் 1975க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் வங்கதேசத்தின் பிரதமராகப் பணியாற்றினார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள்

- மத்திய அறிவியல் மற்றும் **தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்படும்** INST (Institute of Nano Science and Technology – நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்) **மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஸ்டார்ச்சை** அடிப்படையாகக் கொண்ட **'ஹீமோஸ்டாட்' என்ற ஒன்றை உருவாக்கியுள்ளனர்.**
    - விபத்துக்களின் போது விரைவான இரத்த இழப்பைத் தடுப்பதற்காக ஸ்டார்ச் அடிப்படையிலான 'ஹீமோஸ்டாட்' ஆனது உருவாக்கப்பட்டுள்ளது. இது அதிகப்படியான திரவத்தை உடலிலிருந்து உறிஞ்சி, இரத்தத்தில் இயற்கையான உறைதலுக்கான தேவையான காரணிகளைக் குவிக்கின்றது.
    - **செய்தி துளிகள் :**
        - ஹீமோஸ்டாட்கள் இரத்தப் போக்கைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்தப்படும் அறுவைச் சிகிச்சைக் கருவிகளாகும்.

- **நாவிக் செய்தியிடல் அமைப்பு மற்றும் செய்தி பெறும் அமைப்பு** ஆகியவற்றை **இஸ்ரோ வடிவமைத்துள்ளதாக விண்வெளித் துறை** நாடாளுமன்றத்தில் **தெரிவித்துள்ளது.**
    - இந்த அமைப்பானது தற்போது இந்திய தேசியக் கடல்சார் தகவல் மையத்தினால் (Indian National Centre for Ocean Information System – INCOIS) பயன்படுத்தப்படுகின்றது.
    - சுனாமி, சூறாவளி, ஆழிப் பேரலைகள் போன்ற சூழ்நிலைகளில் அவசரகால எச்சரிக்கைத் தகவல்களை ஒளிபரப்ப இந்த அமைப்பானது பயன்படுத்தப்படுகின்றது.

- **செய்தி துளிகள் :**
  - NAVIC என்பது ஒரு இந்தியச் செயற்கைக்கோள் தொகுப்பாகும்.
  - இந்தியத் துணைக் கண்டத்தில் தொடர் கண்காணிப்பை வழங்குவதே இந்த NAVICன் முக்கிய நோக்கமாகும்.

## திருக்குறள்

**குறள்** : **143**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : பிறனில் விழையாமை

**விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்**

**தீமை புரிந்துதொழுகு வார்.**

**விளக்கம்:** பாவத்தின் வழி நின்றவர்கள் எல்லாருள்ளும் பிறனுடைய மனைவியை விரும்பி அவன் தலை வாயிலில் நிற்பவரைப் போல அறியாமையுள்ளவர் இல்லை.